# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 21/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : தேவேந்திரன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 21.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 21st November 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் தற்போது மகேந்திரவாடியில் குடியிருந்து வருகிறேன். நான் எந்த வேலையும் செய்யவில்லை. ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி குருசாமி எனது அத்தை மகன். சுமார் 15 வருடங்களுக்கு முன்பு மாலை 6 மணிக்கு நான் என் வீட்டில் இருந்து கடைக்கு செல்லும்போது வேதக்கோவில் அருகில் பெண்களுக்கு இடையில் ஏற்பட்ட சண்டை சம்பந்தமாக ஆஜர் எதிரி மண்வெட்டியால் என்னை ஓங்கி வெட்டவந்தார். நான் அதை எனது கையால் தடுத்தேன். எனது இடது கை உள்ளங்கையில் காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது. சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு இறந்துபோன என் தம்பி இளங்கோவன் என்னை அழைத்து சென்றார். அங்கு எனக்கு 5 தையல்கள் போடப்பட்டன. மருத்துவமனைக்கு வந்த போலீசார் என்னிடம் புகார் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம்

என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை மண்வெட்டியால் வரும் போது ஆஜர் எதிரி அசிங்கமாக பேசினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எதிரியின் தாயார் பெயர் மாரியம்மாள் என்றால் சரிதான். மாரியம்மாளும் மற்றும் எனது தந்தையும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனது தாத்தாவின் பூர்வீக சொத்து தற்போது வரை பிரிவினை செய்யப்படாமல் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்தில் ஆஜர் எதிரி எனது தாத்தாவின் சொத்தில் விவசாயம் பார்க்கவில்லை என்றால் சரிதான். மாரியம்மாள் அய்யாபுரம் காவல்நிலையத்தில் அளித்த புகார் மனுவின் அடிப்படையில் குற்ற எண்.14/2015 என்ற வழக்கு எனக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் புகார் மனு அளிப்பதற்கு முன்பு எதிரியின் தாயார் மாரியம்மாள் மருத்துவமனைக்கு சென்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மகேந்திரவாடி ஆர்சி சர்ச் பக்கத்தில் பள்ளிக்கூடம் உள்ளதா என்றால் பள்ளிக்கூடம் உள்ளது. மேற்படி சர்ச்சுக்கு அருகில் எதிரியின் அம்மா மாரியம்மாளுக்கு பாத்தியப்பட்ட வீடும், மாட்டுத்தொழுவமும் இருந்ததா என்றால் வீடு இருந்தது. மாட்டுத்தொழுவம் கிடையாது. மாரியம்மாள் மாடுகள் வைத்து பராமரித்து வந்தாரா என்றால் ஒரு மாடு வைத்திருந்தார். மாரியம்மாள் மற்றும் எனது தாயாருக்கு இடையில் பிரச்சனை நடந்ததை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. மாரியம்மாள் எனக்கு எதிராக அளித்த புகார் மனுவை மனதில் வைத்துக்கொண்டு எதிரிக்கு எதிராக பொய்வழக்கு அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு காயம் ஏற்பட்டவுடன் மருத்துவமனைக்கு சென்று அதன்பிறகு காவல்நிலையம் சென்றேனா என்றால் நான் மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனைக்கு வந்த போலீசார் என்னிடம் புகார் பெற்றார்கள். எதிரி என்னை தாக்கியதாக சொல்லும் சமயத்தில் அந்த இடத்தில் வேறு நபர்கள் யாரேனும் இருந்தனரா என்றால் பாலமுரளி மற்றும் வெள்ளச்சாமிதேவர் ஆகிய இருநபர்கள் எங்களை விலக்கிவிட்டார்கள். வெள்ளச்சாமிதேவர் தற்போது உயிருடன் இல்லை. பாலமுரளி குடும்பத்திற்கும், எதிரியின் குடும்பத்திற்கும் இடையில் பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரியால் ஏற்பட்டது அல்ல என்றாலும், என்னால் தானாக

ஏற்படுத்தப்பட்ட காயங்கள் என்றாலும், எதிரியின் குடும்பத்தின் மீதுள்ள வன்மத்தால் அவருக்கு எதிராக பொய்யாக புகார் மனு அளித்தேன் என்றாலும் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும், வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**